NILIS

DPL 2022/2023

# பொது நூலகவியல் டிப்ளோமா

## (கற்கைநெறிக் குறியீடு: DPL)

### 1) அறிமுகம்

இன்றைய காலத்தில் பொது நூலகம் ஒரு சமுதாய அபிவிருத்தி மையமாக மாற்றமடைந்து வருவதுடன் பொது நூலகத்தின் சமூக மற்றும் கலாச்சார வகிபங்கும் சம்பிரதாய சேவைகளான இரவல் வழங்கல், உசாத்துணை மற்றும் செயற் திட்ட சேவை எல்லைகளுக்கப்பால் வியாபகம் அடைந்தும் வருகிறது. எனவே, ஏலவே பொது நூலகங்களில் வேலை செய்பவர்களுக்கும் இனி பொது நூலகங்களில் வேலைக்குச் சேர இருப்பவர்களுக்கும் பொது நூலகத்தின் சமூக, கலாச்சார நிலைமைகள் பற்றிய பரந்த அறிவு அவசியமாகும். பொது நூலகவியல் டிப்ளோமாவானது புதிய வகிபங்குகளின் கடமைகளை நிறைவேற்றுவதற்கான பொருத்தமான அறிவு, மனப்பாங்கு, மற்றும் திறன்களை வழங்க உத்தேசித்துள்ளதுடன் சமூக மற்றும் கலாச்சார மாற்றங்களுக்குத் தோள் கொடுக்கக் கூடிய ஒரு தொழின்வாண்மைக் குழுவை உருவாக்கவும் விழைகிறது.

### 2) இலக்குக் குழு

பொது நூலகங்களில் ஏற்கனவே பணியாற்றுகின்ற அல்லது பொது நூலகத்தில் இணைய விரும்புகின்றவர்களுக்கும் பொருத்தமானது.

### 3) நுழைவுத் தகுதிகள்

GCE (A/L) சித்தி (**பழைய பாடத்திட்டம்**): 04 பாடங்களில் சித்தி
(**புதிய பாடத்திட்டம்**): 03 பிரதான பாடங்களில் சித்தி

**அல்லது**

GCE (O/L) இல் சித்தியுடன் நூலக மற்றும் தகவல் விஞ்ஞானங்களிற்கான தேசிய நிறுவனத்தினால் வழங்கப் பட்ட **பொது நூலகவியல் சான்றிதழ் (CPL)/ பொது நூலகவியலில் உயர் சான்றிதழ் (ACPL)** அல்லது **நூலவியலில் உயர் சான்றிதழ் (ACL)**.

### 4) உத்தேசிக்கப்பட்ட கற்றல் விழைவுகள்

கற்றல் நெறியைப் பூர்த்தி செய்த பின்னர் பங்குபற்றியவர் பின்வருவனவற்றை அடைவார்:

- பொது நூலகத்தின் புதிய வகிபங்குகளை புரிந்து கொள்ளல்,
- சமுதாயம் சார்ந்த அபிவிருத்தியில் பொது நூலகத்தின் பங்கினை அடையாளம் காணல்,
- கலாச்சார மேம்பாட்டில் பொது நூலகத்தின் பங்களிப்பை விளங்கிக் கொள்ளல்,
- சமுதாய அபிவிருத்தியில் புதிய தகவல் தொழினுட்பத்தின் பயனை அடையாளம் காணல்.

### 5) கற்றல் நெறி உள்ளடக்கம்

1. சமுதாய அபிவிருத்தி
2. சேர்க்கை முகாமைத்துவமும் தகவல் சேவைகளும்
3. சுதேச அறிவு
4. கலாச்சார அறிவுடமை
5. ஊடக அறிவுடமை
6. பொது நூலகங்களுக்கான தகவல் தொழினுட்பம்
7. செயற் திட்டம்

6) **கற்றல் நெறியின் முக்கியத்துவம்**: படத்தில் காட்டப் பட்டவாறு DPL ஐ முடிக்கும் நிலையில் SLQF Level 4 இன் உயர் டிப்ளோமாவை தொடர வழி செய்கிறது.

7) **கால அளவு:** ஆறு மாதங்கள்

8) **போதனா மொழி:** சிங்கள அல்லது தமிழ் (கற்கை நெறிகள் எம் மொழியிலாயினும் அக்குறித்த மொழி மூலத்தில் போதுமான எண்ணிக்கையிலான மாணவர்கள் விண்ணப்பித்தால் மட்டுமே கற்கை நிகழ்ச்சி நடாத்தப் படும்).

9) **கற்றல் முறை/விதம்:** மறு அறிவித்தல் வரை சகல வ




10) **மதிப்பீட்டு முறைமை:**

கற்பிக்கப் படும் ஒவ்வொரு பாடத்திற்கும் சகல வகுப்பறை ஒப்படைகள்/ மதிப்பீடுகள்/ தவணைப் பரீட்சைகளிலிருந்து 50% சேர்க்கப் படும். எஞ்சிய 50% தவணை இறுதியில் வைக்கப் படும் எழுத்துப் பரீட்சையிலிருந்து சேர்க்கப் படும். செயற் திட்டத்திற்கு 100% இலிருந்து புள்ளி வழங்கப் படும். மறு தீர்மானம் வரை சகல இறுதித் தவணைப் பரீட்சைகளும் நிகழ்னிலையிலேயே வைக்கப் படும்.

11) **Diploma in Public Librarianship சான்றிதழ் பெறும் வழி**

செயற் திட்டம் உள்ளடங்கலாக ஒவ்வோரு பாடத்திலும் குறைந்தது திறமைச் சித்தி (C - minimum of 50%) பெற்றிருக்க வேண்டும். D அல்லது E சித்திகள் மூன்று அல்லது அதற்குக் குறைந்த பாடங்களுக்கு பெறப்பட்டிருப்பின் அவற்றை மீளவும் எழுத முடியும்.

12) **DPL கற்கை நெறிக் கட்டணங்கள்:**

முழுமையான கட்டணம் **Rs.27,900/=.** முழுமையாகவோ தவ்ணை முறையிலோ கட்டப் படலாம்

| தவணை | தொகை | காலக் கெடு |
|---|---|---|
| முதல் தவணை | Rs.16150 | பதிவின் போது |
| இரண்டாம் தவணை | Rs.11750 | முதலாம் தவணைப் பரீட்சைக்கு முன்னதாக (6 மாதத்தினுள்) |

13) **விண்ணப்ப முடிவுத் திகதி: 07th July 2022**

14) **கற்கை நெறி ஆரம்பிக்கும் திகதி: August 2022**

15) **விண்ணப்பிக்கும் நடைமுறை:**

1. விண்ணப்பப் படிவத்தை எமது இணையத் தளத்திலிருந்து தரவிறக்கவும் https://nilis.cmb.ac.lk/home/news/2022/new_2022/2208/
2. தெளிவாகப் படிவத்தை நிரப்பவும்
3. ரூ. 250 இனை விண்ணப்ப நடைமுறைக்காக **மக்கள் வங்கி, திம்பிரிகஸ்யாய கிளையில்** கணக்கு இலக்கம் **086100101191736** இற்கு வைப்புச் செய்யவும். விண்ணப்பப் படிவத்தின் தரப்பட்ட கூட்டினுள் அசல் ரசீதை ஒட்டவும்.
4. பிறப்புச் சான்றிதழ், GCE (O/L), GCE (A/L) சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடையாள அட்டை (NIC) என்பவற்றின் அத்தாட்சிப்படுத்திய பிரதிகளை இணைக்கவும்.
5. கடித உறையின் இடது மேல் மூலையில் கற்கை நெறி குறியீட்டை எழுதவும்.
6. விண்ணப்பத்தையும் ஏனைய இணைப்புகளையும் பினவரும் முகவரிக்கும் அனுப்பவும்

Senior Assistant Registrar
National Institute of Library & Information Science (NILIS)
University of Colombo, Colombo - 07